A

# முதல் இடைப்பருவப் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | |

நேரம்: 1.30 மணி

## பொதுத் தமிழ்

மதிப்பெண்

I. பலவுள் தெரிக:

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:
   அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
   ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
   i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ
2. பாயிரம் இல்லது ................ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
3. மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
4. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
   இ) யானை டாக்டர் - குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை
5. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
6. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்
7. தமிழர் பாரம்பரிய நாள் எது?
   அ) டிசம்பர் 14 ஆ) ஜனவரி 14 இ) ஜனவரி 18 ஈ) ஜனவரி 15
8. " கொன்றை சூடு" - இலக்கணக்குறிப்பு தருக:
   அ) பண்புத்தொகை ஆ) எண்ணும்மை
   இ) இரண்டாம் வேற்றுமைத்தொகை ஈ) வினைத்தொகை

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி:

9. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
10. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
11. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.
12. வளரும் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
    மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?
13. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ள
14. காவடிச்சிந்து என்பது யாது?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி:

15. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

16. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்

17. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

18. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" - என்பதை எடுத்துக்கா விவரிக்க.

19. வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி:

20. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

21. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
கலை, களை, கழை

22. *எவையேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
அ) அணிந்துரை ஆ) செங்கயல்

23. *எவையேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
அ) ஈன்ற ஆ) வைத்தார்

24. உயிரீறு, மெய்யீறு என்றால் என்ன?

V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

25. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து ெ எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செ தொகுத்துரைக்க.

26. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி விவரிக்க.

(அல்லது)

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:

27. அ) 'ஏடு தொடக்கி' எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.
ஆ) 'பெரிது' என முடியும் குறளை எழுதுக.

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com